ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2161/32 - 2020 පෙබරවාරි මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.02.06

*2161/32 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

*அரசியலமைப்பின் 155 ஒ ஆம் உறுப்புரையின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 155 ஒ ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் அந்த அதிகாரங்களில் சில அதிகாரங்கள் 2017, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதிய 2016/06 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணையில் பணிக்கப்பட்டுள்ளதற்கு அமைய பொலிஸ் மா அதிபருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.*

*2020, சனவரி மாதம் 29 ஆந் திகதியிலிருந்து செயல்படும் வண்ணம் அந்த வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணைக்கு பகரமாக பின்வரும் அட்டவணை பதிலீடு செய்யப்படுகின்றது.*

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

கே. டபிள்யூ. ஈ. கரல்லியத்த,
தவிசாளர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகம்,
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம்,
9 ஆம் இலக்கக் கட்டிடம்,
கொழும்பு 07,
*2020, சனவரி 29.*

1A - PG 004913 — 117 (2020/02)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| இல. | நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் | நிரல் III<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள் |
|---|---|---|---|
| 01 | பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் செயல் வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள்/சேவைப் பிரமாணக் குறிப்புகளுக்கு அமை வாக பதவிகளுக்கு நியமித்தல் மற்றும் பதவியுயர்வுகள் வழங்குதல்;<br>(ii) தகுதிகாண் காலத்திற்குள் நியமனங்களை இரத்துச் செய்தல் அல்லது சேவையை நிறுத்துதல் ;<br>(iii) தேசிய பொலிஸ் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட இட மாற்ற நடைமுறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல் ;<br>(iv) ஒழுக்காற்று கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் செய்தல் ;<br>(v) பணித்தடை செய்தல்;<br>(vi) பதவி வெறிதாக்கல் தொடர்பாக கிடைக்கப்பெறும் மேன்முறை யீடுகளை பரிசீலனை செய்தல். | பொலிஸ் மா அதிபர் |
| 02 | பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழுள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட இட மாற்ற நடைமுறைக்கு அமைவாக இடமாற்றம் செய்தல் ;<br>(ii) ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு ;<br>(iii) பணித்தடை செய்தல் ;<br>(iv) பதவி வெறிதாக்கல் தொடர்பாக கிடைக்கப்பெறும் மேன்முறை யீடுகளை பரிசீலனை செய்தல். | பொலிஸ் மா அதிபர்/சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் |
| 03 | பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழ் உள்ள பதவிகள் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தகுதிகாண் அல்லது பதில் கடமை காலத்திற்குப் பின்னர் நியமனத்தை உறுதி செய்தல்;<br>(ii) சேவையில் இருந்து விலகுதல் தொடர்பாக கிடைக்கப்பெறும் கடிதங்களைப் பொறுப்பேற்றல் அல்லது நிராகரித்தல். | பொலிஸ் மா அதிபர்/ சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (நிர்வாகம்) |
| 04 | பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழ் உள்ள பதவிகள் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) எவரேனுமொரு உத்தியோகத்தர் ஒருவர் அதற்கு அடுத்த நிலையின் பதவிக்கு, தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட பின்னர் ஒரு தடவைக்கு ஒரு வருடம் என்ற அடிப்படையில் ஆகக் கூடியது 03 வருட கட்டாய பதில் கடமை சேவைக்கால எல்லையை நீடிப்புச் செய்தல்; | பொலிஸ் மா அதிபர்/ சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | நிரல் *I* | நிரல் *II* | நிரல் *III* |
|---|---|---|---|
| இல. | உத்தியோகத்தர்கள் வகுதி | கையளிக்கப்படும் அதிகாரங்கள் | அதிகாரங்கள் கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள் |
| | | (ii) வினைத்திறன் காண் தடை தாண்டலில் சித்தியடைவதற்கான தேவைப் பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு தடவைக்கு ஒரு வருடம் என்ற அடிப் படையில் ஆகக் கூடியது 03 ஆண்டு தகுதிகாண் கால எல்லையை நீடித்தல். | |
| 05 | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழ் உள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடை முறைக்கு அமைவாக அந்தந்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் நிர்வாக எல்லைக்குள் இடமாற்றம் செய்தல்;<br>(ii) பதவி நீக்கம் செய்தல் தவிர்ந்த அவர்களின் நிர்வாக எல்லைக்குள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுப் பணிகள்.<br>(iii) சேவை வெறிதாக்கல் தொடர்பாக கிடைக்கப் பெறும் மேன் முறையீடு களை பரிசீலனைக்கு எடுத்தல். | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் |
| 06 | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழ் உள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைக்கு அமைவாக பிரதிப் பொலிஸ் மா அதிபரின் நிர்வாக எல்லைக்குள் இடமாற்றங்கறள் மேற்கொள்ளல். | பிரதிப் பொலிஸ் மா அதிபர் |
| 07 | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழ் உள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளின் நிலையப் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) தேசிய பொலிஸ் ஆணைக் குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட நடவ டிக்கை முறைக்கு ஏற்ப சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I), (பொலிஸ் அத்தியட்சகர்களின் பொலிஸ் அத்தியட்சகர் தரம் II)அந்தந்த நிர்வாக எல்லைக்குள் இடமாற்றங்கள் மேற்கொள்ளல். | பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் |
| 08 | பொலிஸ் பரிசோதகரும் அதற்கு கீழ் உள்ள வரிசையினரும் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் செயல்வலுவிலுள்ள பிரிவுகளின் பொறுப்பதிகாரிகள் தவிர்ந்த) | (i) அந்தந்த நிர்வாக எல்லைக்குள் பணித்தடை செய்தல் ;<br>(ii) ஏற்புடைய நிர்வாக எல்லைக்குள் ஒழுக் காற்று அறை தண்டனை விதித்தல். | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்<br>பிரதிப் பொலிஸ் மா அதிபர்<br>சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் தரம் I)<br>பொலிஸ் அத்தியட்சகர் ( பொலிஸ் அத்தியட்சகர் தரம் II)<br>உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| | *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|---|
| *இல.* | *உத்தியோகத்தர்கள் வகுதி* | *கையளிக்கப்படும் அதிகாரங்கள்* | *அதிகாரங்கள் கையளிக்கப்படும் உத்தியோகத்தர்கள்* |
| *09* | *மகா சார்ஜன்ட்/பொலிஸ் சார்ஜன்ட்/ பொலிஸ் கான்ஸ்டபில்/பொலிஸ் கான்ஸ்டபில் சாரதி ஆகிய பதவிகள் தொடர்பான உத்தியோகத்தர்கள்.* | (i) *பதவி நீக்கம் தவிர்ந்த அவர்களின் நிர்வாக எல்லைக்குள் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுப் பணிகள்*<br>(ii) *சேவை வெறிதாக்கும் அறிவித்தல் தொடர்பாக கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுத்தல்.* | *பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள்* |

*02-405*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*